TNTS090000052004

மாண்பமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்.

முன்னிலை : திரு.M. மாரி, M.S.W., L.L.B.,

நீதித்துறை நடுவர்.

சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 02– நாள் செவ்வாய்க்கிழமை

<u>சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.3350/2004</u>

வேலுப்பாண்டியன் (எ) வேலுச்சாமி, வயது, 60/2004, (விவசாயம்)
த/பெ. சாமி அய்யாத்தேவர் (எ) காத்தப்ப சாமித்தேவர்,
26/1, புதுமனை 2–வது தெரு, சங்கரன்கோவில்.
(சங்கரன்கோவில் நகர காவல் நிலைய சரகம்)

–––– மனுதாரர்/புகார்தாரர்

/எதிர்/

பி.ஆர்.ஸ்ரீதர் ராஜா, வயது, 35/2004,
த/பெ. ராமச்சந்திர ராஜா,
153, மதுரை ராஜா கடைத்தெரு, இராஜபாளையம்,
விருதுநகர் மாவட்டம்.
(இராஜபாளையம் தெற்கு காவல் நிலைய சரகம்)

–––– எதிரி

இந்த வழக்கானது 02.06.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ரமேஷ்குமார், அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.புஷ்பராஜ் அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு கோப்புக்களையும், சாட்சிய சான்றாவணங்களையும் நன்கு பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

<u>தீ ர் ப் பு ரை</u>

இவ்வழக்கானது புகார்தாரரிடம் எதிரி பெற்ற கடன் தொகையை திருப்பிக் கொடுப்பதற்கு வழக்கு காசோலையை எதிரி புகார்தாரருக்கு கொடுத்து அதனடிப்படையில் புகார்தாரர் வழக்கு தாக்கல் செய்தபோது வங்கி கணக்கில் காசோலைக்கான பணம் இல்லை என்பதை நன்கு தெரிந்தே புகார்தாரரை ஏமாற்றி

நம்பிக்கை மோசடி செய்யவேண்டும் என்ற உட்கருத்துடன் எதிரி செயல்பட்டதாக கூறி புகார்தாரர் மாற்று முறை ஆவணங்கள் சட்டம் 1882 பிரிவு 138, 142 மற்றும் திருத்தப்பட்ட சட்டம் **55/2002** மற்றும் அண்டர் செக்சன் **420** ஐ.பி.சி மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 200 (BNSS 223)–ஆகிய பிரிவுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்தப் புகார் மனுவை நீதிமன்றம் கவனமுடன் பரிசீலனை செய்து போதுமான காரணம் எதிரி மீது குற்றம் விசாரிக்கத்தக்க முகாந்திரம் உள்ளது என இந்நீதிமன்றம் திருப்தி அடைந்து பின் கு.வி.மு.ச. பிரிவு 190 (1) (a)(BNSS 210)–ன் கீழ் இவ்வழக்கு நீதிமன்றம் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

2. <u>புகார்தாரரின் மனுவின் சுருக்கம்:</u>

2.1. புகார்தாரரிடம், எதிரி வியாபார நிமித்தம், குடும்ப செலவுக்காகவும், ரூ.2,00,000/– கடனாகக் கேட்டுள்ளார் என்றும், மேற்படி, புகார்தாரர் திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவிலில் உள்ள அவரது வீட்டில் வைத்து ரூ.75,000/– ரொக்க பணமாகவும், ரூ.1,25,000/–த்தை சங்கரன்கோவிலில் உள்ள இந்தியன் வங்கியில் மாற்றத்தக்க 16.06.2004–ம் தேதியிட்ட வரிசை எண். 925785 கொண்ட காசோலையாகவும், மேற்படி தேதியான 16.06.2004–ம் தேதியன்று மேற்படி எதிரியிடம் கடனாகக் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி கடன் தொகையான ரூ.2,00,000/–த்தையும் 30 தினங்களுக்குள் திருப்பிச் செலுத்துவதாக எதிரி வாக்களித்துள்ளார் என்றும், ஆனால், எதிரி வாக்களித்தபடி திருப்பிச் செலுத்தாததினால், புகார்தாரர் பலமுறை நேரிலும், வேறு வகையாட்கள் மூலமும் கேட்டு வந்ததில் எதிரி புகார்தாரரிடம் கனரா வங்கி, இராஜபாளையம் கிளையில் செலுத்தத்தக்க 23.09.2004–ம் தேதியிட்ட வரிசை எண்.597961 உள்ள காசோலை வழங்கியுள்ளார்.

2.2. மேற்படி கடன் தொகையை வசூல் செய்யும் பொருட்டு மேற்படி காசோலையை புகார்தாரர் வங்கிக்கணக்கு வைத்துள்ள இந்தியன் வங்கி, சங்கரன்கோவில் கிளை மூலமாக வசூலுக்காக வேண்டி 23.09.2004–ம் தேதி தாக்கல் செய்தார் என்றும், மேற்படி காசோலையை போதிய பணம் இல்லை (Insufficient funds) என்ற காரணம் கூறி கனரா வங்கி, இராஜபாளையம் கிளை 24.09.2004–ம் தேதியில் திருப்பிவிட்டது என்றும், மேற்படி காசோலையும், "போதிய பணம் இல்லை" என்று திருப்பப்பட்ட தகவல் குறிப்பும் 28.09.2004–ம் தேதியில் எதிரியின் வங்கியிலிருந்து புகார்தாரர் வங்கி மூலமாக புகார்தாரருக்கு அனுப்பப்பட்டு, தகவல்

தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், புகார்தாரருக்கு எதிரியால் கொடுக்கப்பட்ட 23.09.2004–ம் தேதியிட்ட காசோலையில் கண்டுள்ள ரூ.2,00,000/–த்தை (இரண்டு லட்சம்) 15 தினங்களுக்குள் செலுத்திப்போகும்படி கேட்டு 08.10.2004–ம் தேதியில் பதிவு தபால் மூலம் புகார்தாரர் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றும், மேற்படி அறிவிப்பை 09.10.2004 அன்று எதிரி பெற்றுக்கொண்டு எவ்வித பதில் அறிவிப்போ, காசோலையில் கண்ட தொகையையோ செலுத்தவில்லை என்றும், எதிரி கணக்கில் கனரா வங்கி, இராஜபாளையம் கிளையில் பணம் இல்லாதது தெரிந்தே, வேண்டுமென்றே புகார்தாரருக்கு தரவேண்டிய கடன் தொகைக்கு காசோலை வழங்கியது, புகார்தாரரை ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் திட்டமிட்டு செய்யப்பட்ட மோசடி என்றும், இதன் மூலம் புகார்தாரருக்கு இந்த எதிரி மிகுந்த ஏமாற்றத்தையும், இழப்பையும் ஏற்படுத்தியுள்ளார் என்றும், எனவே, எதிரியின் இந்த செய்கையானது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138, 142 மற்றும் இநதியத் தண்டனைச் சட்டம் பிரிவு 420–னபடி குற்றம் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

3. <u>**எதிரிக்கு வழக்கு ஆவணங்கள் வழங்கி, குற்றம் குறித்து வினவிய விபரம் :–**</u>

3.1 இவ்வழக்கின் எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு 204 (227 BNSS)–ன்படி அழைப்பணை அனுப்பி எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் புகார்தாரர் தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு 208 (231 BNSS) –ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசம் அளித்து, இரு தரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்தவகையில் கு.வி.மு.ச. பிரிவு 251 (274 BNSS)–ன் கீழ் எதிரி மீது குற்றத்தின் விபரங்கள் எதிரிக்கு பின்வருமாறு வினவப்பட்டது.

3.2. **இவ்வழக்கில்,** சங்கரன்கோவிலில் உள்ள அவரது வீட்டில் வைத்து ரூ.75,000/– ரொக்க பணமாகவும், ரூ.1,25,000/–த்தை சங்கரன்கோவிலில் உள்ள இந்தியன் வங்கியில் மாற்றத்தக்க 16.06.2004–ம் தேதியிட்ட வரிசை எண். 925785 கொண்ட காசோலையாகவும், மேற்படி தேதியான 16.06.2004–ம் தேதியன்று மேற்படி எதிரியிடம் கடனாகக் கொடுத்துள்ளார் என்றும், சொன்ன தேதியில் தராததால் புகார்தாரர் எதிரியிடம் கேட்டபோது, 23.09.2004–ம் தேதியிட்ட 597961 எண்ணுள்ள கனரா வங்கி, இராஜபாளையம் கிளைக்குண்டான காசோலையை மேற்படி தொகைக் கொடுத்ததாகவும், அதை புகார்தாரர் வசூலுக்கு செலுத்தியபோது பணம் இல்லை என்று

24.09.2004–ம் தேதியன்று திருப்பப்பட்டுள்ளது என்றும், எனவே, புகார்தாரரை ஏமாற்றும் நோக்கத்தில் எதிரி செயல்பட்டுள்ளதால், எதிரி மீது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 மற்றும் 142–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக குற்றச்சாட்டு வினவப்பட்டது.

3.3. மேற்படி குற்றச்சாட்டுக்களை எதிரிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, விளக்கப்பட்டு குற்றத்தை ஒத்துக்கொள்கிறீர்களா ? அல்லது விசாரணையை வேண்டுகிறீர்களா? என்று வினவப்பட்டது. அப்போது எதிரி குற்றச்சாட்டுக்களை மறுத்தார்.

3.4. இதற்குப்பின் புகார்தாரர் தரப்பில் சாட்சிகளை ஆஜர்படுத்த உத்தரவிடப்பட்டது. அதனடிப்படையில், புகார்தாரர் தரப்பில் ம.சா.1 மட்டும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. எதிரி தரப்பில் எ.சா.1 மட்டும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர்கள் மூலம் எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.3 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

3.5. புகார்தாரர் தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டபின், அவரது சாட்சியத்தில் எதிரிக்கு எதிரான சங்கதிகள் பற்றி நேரடியாக விளக்கம் பெறுவதற்காக கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b) (351 – BNSS)–ன் கீழ் கேள்விகள் கேட்டபோது எதிரி பொய் என்று மறுத்தார்.

<u>எதிரியின் வாதம்</u>

4) இந்த வழக்கில் எதிரி தரப்பில் புகார்தாரர் கடந்த 08.10.2004 அன்று எதிரியின் முகவரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். அதனை எதிரி 09.10.2004 அன்று வழக்கறிஞர் அறிவிப்பை பெற்று கொண்டு எந்தவித பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை. அதனை தொடர்ந்து இந்நீதிமன்றத்தில் இருந்து எதிரிக்கு புகார்தாரர் வழக்கில் குறிப்பிட்டுள்ள எதிரியின் முகவரிக்கு அழைப்பானை அனுப்பி அதன் பிறகு எதிரி அவர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி வருகிறார். அதேபோன்று, **கு.வி.மு.ச பிரிவு 313–ன் கீழ் நீதிமன்றம் மூலம் புகார்தாரரின் வழக்கு குறித்து கேள்வி கேட்ட போது, கடந்த 31.03.2005 அன்று எதிரி பொய் என்றும், இவ்வழக்கு சம்பந்தமாக வேறு**

ஏதேனும் கூற வேண்டுமா? என நீதிமன்றம் கேட்டபோதும் எதிரி பொய் என பதிலும், உமது தரப்பில் ஏதேனும் விசாரிக்க சாட்சிகள் உண்டா? என நீதிமன்றம் கேட்டபோது எதிரி உண்டு என பதில் தெரிவித்துள்ளார். ஆனால், சாட்சிகளின் பெயர்களை குறிப்பிட்டு சொல்லவில்லை. அதனைத் தொடர்ந்து, எதிரி தரப்பில் நீதிமன்றத்தில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்தபோதும், கு.வி.மு.ச. பிரிவு 314–ன் கீழ் எதிரியின் வாதத்தை எழுத்துமூலமாக வாதுரையாக தாக்கல் செய்துள்ளார். அதில், எதிரியின் வாதமானது, "எதிரி தரப்பில் மேற்கண்ட கூற்றுக்குள் மறுக்கப்படுகிறது. ம.சா.1 இடமிருந்து ரூ.1–1/2 லட்சம் கடன் பெற்றிருந்தார் என்றும், அவ்வாறு கடன் பெறும்போது அவர் சகோதரியாக எஸ்.பி.லதா என்பவருக்கு பாத்திய்பபட்ட 14 செண்ட் நிலத்தை 17.04.2002 அன்று நம்பிக்கை கிரையமாக எழுதிக் கொடுத்திருந்தார் என்றும் கூறுப்படுகிறது. அவ்வாறு நம்பிக் கிரையம் எழுதிக் கொடுத்த தேதியிலேயே இவ்வழக்கின் ம.சா.ஆ.1 காசோலையை தேதி, பெயர் மற்றும் தொகை நிரப்பப்படாமல் கையொப்பம் மட்டும் செய்து, அ.சா.1 கேட்டுக் கொண்டததின் பேரில் அவரிடம் கொடுக்கப்பட்டது என்றும், அவரிடம் பெற்று வந்த ரூ.1,50,000/– மே மாதம் 2002 முதல் ஏப்ரல் 2003 வரை வட்டி எதிரி செலுத்தியுள்ளார் என்றும், அதன்பின்பு ம.சா.1 இடம் பெற்ற கடன் தொகை ரூ.1–1/2 லட்சத்தை அவரிடம் எதிரி கொடுத்து மீண்டும் இடத்தை எழுதிக் கேட்டதற்கு அவர் பேசியபடி எழுதித்தராமல் மறுத்துவிட்டார் என்றும் கூறப்படுகிறது. அதன்பின்பு, ம.சா.1ன் உறவினராக முத்தையாபாண்டியன் என்பவர் மூலம் ரூ.1,25,000/–த்தை எதிரியிடம் கொடுத்து மீதமுள்ள தொகை ரூ.25,000/–த்தை ஒரு வாரத்தில் கொடுத்து மறுகிரையம் செய்து கொடுக்க கேட்டதற்கு எதிரியிடம் பெற்று ரூ.1,25,000/–த்தை 14.06.2004 தேதியிட்ட சங்கரன்கோவில், இந்தியன் வங்கி கிளை காசோலை மூலம் எதிரிக்கு கொடுத்துவிட்டு எதிரி கேட்டபடி 18.04.2002 அன்று தான் கிரையம் பெற்ற சொத்தினை மறுகிரையம் செய்ய மறுத்துவிட்டார் என்றும் கூறுப்படுகிறது. அவ்வாறு பேசியபடி நடந்து கொள்ளாததினால், எதிரி 08.07.2004 அன்று சங்கரன்கோவிலில் உள்ள காவல்துறை கண்காணிப்பாளர் அலவலகத்தில் ம.சா.1 மீது புகார் கொடுத்ததாகவும், எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் சங்கரன்கோவில் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டார் என்றும், அதன்படி எதிரியிடம் எழுதிக் கொடுத்த முன்தொகை முழுவதையும் பெற்றுக்

கொண்டு மீண்டும் 17.04.2002 அன்று தான் பெற்ற சொத்தை மறுகிரையம் செய்து கொடுக்க ஒப்புக் கொண்டதாகவும், எதிரி தரப்பில் சொல்லப்படுகிறது. எதிரியிடம் பணத்தினை பெற்றுக் கொண்டு 22.07.2004 அன்று இராஜபாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து, சொத்தினை மறுகிரையம் ம.சா.1 எழுதிக் கொடுத்தார் என்றும் மறுகிரையம் செய்து கொடுத்த மறுதினமாக 23.07.2004 அன்று காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து, தனக்கும், எதிரிக்கும் உள்ள பண தாவா முடித்துவிட்டதகாவும், எதிரிக்கும், தனக்கும் எவ்வித பிரச்சனையும் இல்லை என ஒப்புக்கொண்டு ஒரு வாக்குமூலம் எழுதிக் கொடுத்ததாகவும் அதில் புகார்தாரரும், எதிரியும் தனித்தனியாக கையொப்பம் செய்ததாகவும் எதிரி தரப்பில் சொல்லப்படுகிறது. பணத்தினை பெற்றுக் கொண்ட பின்பு எதிரி கையொப்பம் மட்டும் செய்து கொடுத்த காசோலையை வைத்து பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக இவ்வழக்கு புனையப்பட்டுள்ளது என்று எதிரியால் மேற்படி மனுவில் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

5. எதிரி தரப்பில் எ.சா.1 விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.3 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

6. **<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் :–</u>**

1) **வழக்கு காசோலை எண். 597961–ஐ எதிரி புகார்தாரரிடமிருந்து பெற்ற ரூ.2,00,000/–சட்டப்பூர்வ கடனுக்காக எதிரியின் காசோலையை புகார்தாரருக்கு வழங்கினாரா?**

2) பிரிவு 138 மற்றும் 142 மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின்படி எதிரி தண்டிக்கத்தக்கவரா?

7. <u>நிரூபண சுமை :–</u>

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101–ன் படி(BSA– 104) புகார்தாரர் தரப்பில்தான் எதிரி குற்றத்தை செய்தார் என்பதை நிரூபிக்க வேண்டிய சுமை (Burden of proof) புகார்தாரரை சார்ந்ததாகும்.

8. சாட்சியங்களும், பரிசீலனையும் :–

மேற்படி புகார்தாரர் தரப்பு மனுவின்படி சங்கரன்கோவிலில் உள்ள அவரது வீட்டில் வைத்து ரூ.75,000/– ரொக்க பணமாகவும், ரூ.1,25,000/–த்தை சங்கரன்கோவிலில் உள்ள இந்தியன் வங்கியில் மாற்றத்தக்க 16.06.2004–ம் தேதியிட்ட வரிசை எண். 925785 கொண்ட காசோலையாகவும், மேற்படி தேதியான 16.06.2004–ம் தேதியன்று மேற்படி எதிரியிடம் கடனாகக் கொடுத்துள்ளார் என்றும், எதிரி கனரா வங்கி, இராஜபாளையம் கிளை காசோலை எண்.597961 ஒன்றினை ரூ.2,00,000/–ற்கு கடந்த 23.09.2004–ல் தேதியிட்ட காசோலையை புகார்தாரரிடம் கொடுத்துவிட்டு வசூலுக்கு போட்டு பணத்தை பெற்றுக்கொள்ளும்படி கூறியதாகவும், பின்னிட்டு புகார்தாரர் மேற்படி காசோலையை கடந்த 23.09.2004-ம் தேதியன்று தனது இந்தியன் வங்கி, சங்கரன்கோவில் கிளையில் வசூலுக்காக தாக்கல் செய்தபோது மேற்படி காசோலை எதிரி சேமிப்பு கணக்கில் Insufficient Funds (போதிய பணமில்லை) என்ற காரணத்தைக் காட்டி கடந்த 24.09.2004–ம் தேதியன்று திருப்பியதாகவும், மேற்படி காசோலை திருப்பப்பட்டு புகார்தாரரின் வங்கினரால் 28.09.2004 அன்று புகார்தாரருக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், கடந்த 08.10.2004 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதை எதிரி கடந்த 09.10.2004-ம் தேதியில் பெற்றுக்கொண்டும் எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பாமல் நாளது தேதி வரை காசோலைக்குரிய தொகையை செலுத்தவில்லை என்பதை புகார்தாரர் இந்த மனுவில் மெய்ப்பிக்க வேண்டியது. அதன் அடிப்படையில், இந்த வழக்கில் புகார்தாரர் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் உட்கூறுகளை மெய்ப்பிக்க வேண்டும்.

9. **பிரிவு 138. கணக்கில் போதிய அளவுக்கு பணம் இல்லாமையால் காசோலை மறுக்கப்படுதல் –**

மற்றொரு நபருக்கு கொடுக்க வேண்டிய கடன் அல்லது வேறு ஏதேனும் பொறுப்படைவுக்கு, நபர் ஒருவர் தமது வங்கிக் கணக்கிலுள்ள தொகையை முழுமையாகவோ அல்லத ஒரு பகுதியாகவோ வங்கியாளர் கொடுத்திடுவதற்கு காசோலை அளித்திருக்கும்போது, அந்தக் காசோலை, வங்கிக் கணக்கில் போதிய அளவுக்குப் பணம் இல்லாமையால், அல்லது வங்கிக் கணக்கிலுள்ள தொகையைக் காட்டிலும் காசோலையில் குறிப்பிட்டுள்ள தொகை கூடுதலாக இருந்த காரணத்தால்

தொகை அளிக்காது திருப்பப்பட்டிருந்தால், அந்தக் காசோலையை வழங்கிய நபர் குற்றமிழைத்தவராவார். அந்த நபர் இந்தச் சட்டத்தின் மற்றைய வகையங்களுக்குக் குந்தகமில்லாத வகையில் (1) இரண்டாண்டுகள் வரையில் சிறைத்தண்டனை அல்லது காசோலையில் உள்ள தொகையைப் போல் இருமடங்கு அபராதம் விதித்துத் தண்டிக்கப்படுவார் ; அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுவார்.

<u>வரம்புரையாக :–</u>

பின்வரும் வகையிலன்றி மற்றைய வகையில் இந்தப் பிரிவில் அடங்கியுள்ளவை பொருந்தாது.

(அ) காசோலை (Cheque) வரையப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் அல்லது காசோலை செல்லும்படியாகும் தேதிக்குள், இதில் எது முந்தியதோ அதற்குள் காசோலையை வங்கியில் தாக்கல் செய்தல் வேண்டும்.

(ஆ) வங்கியிலிருந்து தொகை அளிக்கப்படாமல் காசோலை திருப்பப்பட்டு, தனக்குத் தகவல் கிடைக்கப்பட்ட தேதியிலிருந்து (2) முப்பது நாட்களுக்குள், காசோலை மூலம் தொகை வரப்பெற வேண்டியவர் அல்லது காசோலையைப் பெற்றிருக்கின்றவர், தொகையை அளிக்கக்கேட்டு, காசோலை வரைந்தவருக்கு எழுத்து மூலம் அறிவிப்புச் செய்தல் வேண்டும்.

(இ) அறிவிப்புக் (Notice) கிடைத்ததிலிருந்து பதினைந்து நாட்களுக்குள், காசோலை வரைந்தவர், தொகையைப் பெற வேண்டியவருக்கு அல்லது காசோலையைப் பெற்றிருக்கின்றவருக்குத் தொகையை அளிக்கத் தவறியிருத்தல் வேண்டும்.

<u>விளக்கம் :</u>

இந்தப் பிரிவின் நோக்கத்தின் பொருட்டு, 'கடன் அல்லது மற்றைய பொறுப்படைவு' என்பது சட்டப்பூர்வமாக அமல்படுத்தப்படும் கடன் அல்லது மற்றைய பொறுப்படைவு என்று பொருள்படும்.

அதன் அடிப்படையில்,

முதலில் எதிரிக்கு சொந்தமாக வங்கிக் கணக்கு இருக்க வேண்டும்.

இரண்டாவதாக எதிரியின் வங்கிக் கணக்கின் காசோலையை சட்டப்பூர்வ கடனுக்காக புகார்தாரருக்கு வழங்கியிருக்க வேண்டும்.

மூன்றாவதாக, வழக்கின் காசோலை 3 மாத காலத்திற்குள் புகார்தாரரால் வங்கியில் தாக்கல் செய்திருக்க வேண்டும்.

நான்காவதாக, புகார்தாரர் தாக்கல் செய்த காசோலையானது போதிய பணம் இல்லை என்றோ, பிற காரணங்களினால் திருப்பப்பட்டிருக்க வேண்டும்.

ஐந்தாவதாக, திருப்பப்பட்ட காசோலையின் அடிப்படையில் புகார்தாரருக்கு கிடைக்கப்பட்ட குறிப்பாணை தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் எதிரிக்கு Demand Notice எதிரிக்கு அனுப்பியிருக்க வேண்டும்.

ஆறாவதாக, வழக்கறிஞர் அறிவிப்பைப் பெற்றுக்கொண்ட எதிரி 15 நாட்களுக்குள் புகார்தாரரின் கோரிக்கையை நிராகரித்திருக்க வேண்டும்.

ஏழாவதாக, புகார்தாரர் 30 நாட்களுக்குள் எதிரியின் மீது உரிய நீதிமன்றத்தில் புகார்மனு தாக்கல் செய்திருக்க வேண்டும்.

10. மேற்படி, இந்த மனுவில், புகார்தாரரிடமிருந்து சங்கரன்கோவிலில் உள்ள அவரது வீட்டில் வைத்து ரூ.75,000/– ரொக்க பணமாகவும், ரூ.1,25,000/–த்தை சங்கரன்கோவிலில் உள்ள இந்தியன் வங்கியில் மாற்றத்தக்க 16.06.2004–ம் தேதியிட்ட வரிசை எண். 925785 கொண்ட காசோலையாகவும், மேற்படி தேதியான 16.06.2004–ம் தேதியன்று மேற்படி எதிரியிடம் கடனாகக் கொடுத்துள்ளார். அந்தக் கடனை, எதிரி பெற்றுக்கொண்டு கடனை திருப்பித் தருவதாக உறுதியளித்து, எதிரி வங்கிக் கணக்கு வைத்துள்ள கனரா வங்கி, இராஜபாளையம் கிளை காசோலை எண். 597961 என்ற காசோலையில் ரூ.2,00,000/–த்திற்கு 23.09.2004 தேதியிட்டு புகார்தாரருக்கு வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில், புகார்தாரர் கடந்த 23.09.2004–ம் அன்று புகார்தாரர் வங்கிக் கணக்கு வைத்துள்ள இந்தியன் வங்கி, சங்கரன்கோவில் கிளையில் வசூலுக்காக தாக்கல் செய்துள்ளார். அதன்பிறகு, எதிரி வங்கியானது எதிரியின் வங்கிக் கணக்கில் போதுமான பணம் இல்லை (Insufficient Funds) என்ற காரணத்துடன் தொகை வசூலாகாமல் கடந்த 24.09.2004 அன்று திருப்பப்பட்டு, புகார்தாரர் வங்கி மூலம் 28.09.2004 அன்று புகார்தாரருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பிறகு, புகார்தாரர் எதிரிக்கு பணத்தை திரும்ப செலுத்தக் கேட்டு கடந்த 08.10.2004-ம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு அனுப்பியுள்ளார். அந்த வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி 09.10.2004 அன்று பெற்றுக் கொண்டார். அதன்பிறகு, எதிரி பதிலறிவிப்பு

அனுப்பவில்லை. அதன்பிறகு புகார்தாரர் இந்த மனுவை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி, புகார்தாரர் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் உட்கூறுகளை 23.09.2004—ம் தேதியிட்ட ரூ.2,00,000/—த்திற்கான கனரா வங்கி, இராஜபாளைம் கிளைக்குரிய காசோலை எண். 597961 என்ற எண் கொண்ட காசோலை அசல் ம.சா.ஆ.1 ஆகவும், 24.09.2004—ம் தேதியன்று கனரா வங்கி, இராஜபாளையம் கிளையால் காசோலை திருப்பப்பட்டதற்கான மேலெழுத்து குறிப்பு ம.சா.ஆ—2 ஆகவும், 28.09.2004 தேதியிட்ட புகார்தாரர் வங்கி காசோலை திருப்பப்பட்டதை புகார்தாரருக்கு தெரிவித்த மேலெழுத்து குறிப்பு ம.சா.ஆ.3 ஆகவும், 08.10.2004—ம் தேதியிட்ட எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் (அஞ்சலக ரசீதுடன்) ம.சா.ஆ.4 ஆகவும், 09.10.2004—ம் தேதியில் புகார்தாரர் வழக்கறிஞர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை எதிரி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.5 ஆகவும், மேற்படி ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான தன் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து, தனது புகார் மனுவை நிரூபணம் செய்தும், நீதிமன்றத்தில் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது **புகார்தாரர் (ம.சா.1)** பின்வருமாறு தன் வழக்கை நிருபிக்கும் வகையிலும், எதிரி வாதத்தை மறுத்து பின்வருமாறு சாட்சியம் அளித்துள்ளார்.

11. எனக்குச் சொந்த ஊர் சங்கரன்கோவில். நான் ஆசிரியராக பணி செய்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் பள்ளியில் இருந்து ஓய்வு பெற்று 2 வருடம் ஆகிறது. ஸ்ரீதர்ராஜாவின் சொந்த ஊர் இராஜபாளையம் என்றால் சரிதான்.

12. நான் பணி ஓய்வு பெற்ற பின்னர் பல நபர்களுக்கு காசோலை மூலமாகவும், புரோநோட்டு மூலமாகவும் கடன் கொடுத்து, ஆவணங்களின் மூலமாகவும் கடன் கொடுத்து அவர்கள் மீது வழக்குப் போட்டுள்ளேன் என்றால் சரிதான்.

13. மேற்படி ம.சா.1 சாட்சியத்திலிருந்து ம.சா.1 ஓய்வு பெற்ற ஆசிரியர் என்றும், எதிரி தனக்கு நன்கு பழக்கமானவர் என்றும், ரூ.2,00,000/- பணம் கொடுப்பதற்கு தனக்கு வருவாய் ஆதாரம் (Financial Capacity) உள்ளது என்று தன் வழக்கை நிரூபணம் செய்துள்ளார் என்பதை அறியலாம்.

14. 17.04.2002 அன்று லதா என்பவரிடம் நான் பதிவுக்கிரயம் பெற்றபோது இந்த வழக்கில் கண்ட தாவா காசோலை என்னிடம் கொடுக்கப்பட்டது என்றால் அது தவறு.

எனது சகோதரியின் மகளை வாசுதேவநல்லூரைச் சேர்ந்த ராமையா பாண்டியனுக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ராமையாபாண்டியன் தற்போது உயிருடன் இல்லை. ராமையாப் பாண்டியன் உயிருடன் இருக்கும்போது, எதிரி ஸ்ரீதர்ராஜா கொடுக்க வேண்டிய பணம் சம்பந்தமாக நாங்கள் பேசவில்லை. ராமையாபாண்டியன் உடன் பிறந்த முத்தையாப் பாண்டியன் உயிருடன் இருக்கிறார். முத்தையாப் பாண்டியனுக்கும், எனக்கும் விரோதம் இல்லை. லதாவிடமிருந்து கிரயம் பெற்ற இடம் சம்பந்தமாக எதிரி வகையறாக்கள் முத்தையா பாண்டியன் மூலமாக விவகாரம் பேசினார்கள். அவ்வாறு, சொத்து சம்பந்தமாக முத்தையாப்பாண்டியன் மூலம் பேசப்பட்ட விவகாரம் 23.07.2004-க்கு முன்னர் பேசப்பட்டது. முத்தை பாண்டியன் மூலம் பேசப்பட்ட விவகாரம் சுமூகமாக முடியவில்லை. ஸ்ரீதர்ராஜா என்னிடம் ரூ.1-1/2 லட்சம்தான் கடன் பெற்றிருந்தார் என்றால் அது பொய். அவ்வாறு அவர் 1-1/2 லட்சம் கடன் பெறும்போது அவரது சகோதரியான எஸ்.பி.லதா என்பவருக்கு பாத்தியப்பட்ட இராஜபாளையத்தில் உள்ள 14 செண்ட் நிலத்தை 17.04.2002 அன்று நம்பிக்கைக் கிரையமாக எனக்கு எழுதிக் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு மேற்படி நம்பிக்கைக்கிரயம் எழுதிக் கொடுத்த அதே தேதியில் இவ்வழக்கின் ம.சா.ஆ.1 காசோலையை தேதி, பெயர் மற்றும் தொகை நிரப்பப்படாமல் கையொப்பம் மட்டும் செய்து நான் கேட்டுக் கொண்டதன்பேரில் என்னிடம் கொடுத்திருந்தார் என்றால் அது சரியல்ல. அவ்வாறு என்னிடம் பெற்ற கடன் தொகைக்கு எதிரி 2002 மே மாதம் முதல் 2003 ஏப்ரல் மாதம் வரை வட்டியும் செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. அதன்பின்னர் ஏப்ரல் 2003-க்கு பின்னர் தங்களிடம் பெற்ற கடன் தொகை 1-1/2 லட்சத்தை என்னிடம் கொடுத்து மீண்டும் இடத்தை எழுதிக்கேட்டதற்கு நான் பேசியபடி இடத்தை எழுதித்தர மறுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. அதன்பின்னர் எனது உறவினரான முத்தையாப்பாண்டியன் என்பவர் மூலம் ரூ.1,25,000/- என்னிடம் கொடுத்து மீதமுள்ள தொகை 25,000/-ஐ ஒரு வாரத்தில் கொடுத்து மறு கிரயம் செய்து கொடுக்கக் கேட்டதற்கு, எதிரியிடம் பெற்ற ரூ.1,25,000/-த்தை 14.06.2004-ம் தேதியிட்ட சங்கரன்கோவிலில் உள்ள இந்தியன் வங்கி கிளை காசோலை மூலம் நான் எதிரிக்கு பணத்தைக் கொடுத்து விட்டு, எதிரி கேட்டபடி 17.04.2002- அன்று நான் கிரையம் பெற்ற பணத்தை மறு கிரையம் செய்து கொடுக்க மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் பேசியபடி நடந்து

போகாததால் எதிரி கடந்த 08.07.2004 அன்று சங்கரன்கோவிலில் உள்ள காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் அலுவலகத்தில் என் மீது புகார் கொடுத்திருந்தார் என்றால் பொய். அவ்வாறு எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் நான் சங்கை காவல் துறை துணைக்கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்டு, என்னை விசாரித்ததாக சொன்னால் அது பொய். அவ்வாறு துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரிக்கும்போது, நான் எதிரியிடம் எழுதிக் கொடுத்த கடன் தொகை முழுவதையும் பெற்றுக்கொண்டு மீண்டும் 17.04.2002-ம் அன்று நான் பெற்ற சொத்தை மறு கிரையம் செய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டேன் என்றால் அது பொய். அதன்படி நான் எதிரியிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு 22.07.2004- அன்று இராஜபாளையம், சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து மேற்படி சொத்தை மறுகிரையம் செய்து கொடுத்தேன் என்றால் மறுகிரயம் செய்தது மட்டும் உண்மை. அவ்வாறு மறுகிரயம் செய்து கொடுத்த மறுதினம் 23.07.2004 அன்று காவல்துணை துணைக்கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து எனக்கும், எதிரிக்கு உள்ள பணத்தாவா முடிந்துவிட்டதாகவும், எதிரிக்கும், எனக்கும் எந்தப் பிரச்சனையும் இல்லை என்று கூறி ஒப்புக்கொண்டு, அங்கு பதிவு செய்த வாக்குமூலத்தில் நானும், எதிரியும் தனித்தனியாக கையொப்பம் செய்துள்ளோம் என்று சொன்னால் அது சரியல்ல. **இவ்வாறு எதிரியிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் எதிரி கையொப்பம் மட்டும் செய்து கொடுத்த காசோலையை வைத்து பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.** இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் 08.10.2004 அன்ற நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அவ்வாறு சட்டப்படி செல்லத்தகாத அறிவிப்பின்மீது தொடரப்பட்ட இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நான் இட்ட கையொப்பம் என்னை கட்டாயப்படுத்தி பெறப்பட்டதல்ல என்றால் சரியல்ல.

15. மேலும், மனுதாரர் தரப்பில் மனுதாரரை மறுவிசாரணை செய்தபோது, பின்வருமாறு சாட்சியம் அளித்துள்ளார்.

" எ.த.சா.ஆ–1 என்னால் எழுதப்பட்டதல்ல. அதை நான் படித்துப்பார்க்கவும் இல்லை. டி.ஏ.எஸ்.பி. அலுவலகத்தில் வைத்து என்னை மிரட்டி கையெழுத்து

பெற்றார்கள். இதற்கு முன்னர் என்னை காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்து என்னை விசாரிக்கவில்லை. வேறு எந்த காவல் நிலையத்திருந்தும் என்னை யாரும் விசாரிக்கவும் இல்லை. டி.எஸ்.பி. அலுவலகத்தில் வைத்து லதாவிற்கும், எனக்கும் உள்ள பிரச்சனையைப் பற்றி விசாரித்தார்கள். எ.த.சா.ஆ–1ல் கிரயம் முடித்த அன்றே 23.07.2004– அன்று தேதியிட்டு கையெழுத்து போடச் சொன்னார்கள். இந்த வழக்கு ஸ்ரீதர்ராஜா கொடுத்த காசோலை மனு தொடரப்பட்டுள்ளது. எதிரிக்கும் சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

16. மேற்படி, ம.சா.1 புகார்தாரரின் சாட்சியத்திலிருந்து புகார்தாரர் இந்த வழக்கை நிரூபணம் செய்துள்ளார். அதேபோன்று எதிரியின் வாதத்தை மறுத்து சாட்சியம் அளித்துள்ளார்.

17. மேற்படி, வழக்கில் எதிரியின் வாதமானது வழக்கின் காசோலை எதிரி புகார்தாரரிடம் கடன்பட்ட ரூ.1,50,000/–த்திற்கு ஈடாக தனது சகோதரி லதா என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை கிரையம் செய்து கொடுத்து அதோடு, இந்த வழக்கின் காசோலையை புகார்தாரிடம் கொடுத்திருந்ததாகவும், அதன்பிறகு ரூ.1,50,000/–த்தை பைசல் செய்தபிறகு புகார்தாரர் வாங்கிய கிரயத்தை எதிரி சொன்ன வெளி நபர்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றும், ஆனால், வழக்கின் காசோலையை திருப்பித் தராமல் மோசடித்தனமாக வங்கியில் தாக்கல் செய்து, இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் என்பதே எதிரியின் வாதமாகும். மேற்படி, எதிரி தரப்பில் எ.சா.1 மருதப்பன் என்பவரை விசாரைண செய்துள்ளார். எ.சா.1 மூலம் எ.சா.ஆ.1, எ.சா.ஆ.2 , எ.சா.ஆ.3 ஆகிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். மேற்படி எ.சா.1 என்பவர் மாவட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர் ஆவார். அவர் ஒரு போலீஸ் அதிகாரி ஆவார். எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களை புகார்தாரர் எதிரி கொடுத்த புகார் மனுவின் பேரில் விசாரணைக்கு ஆஜராகி அங்கு ஒரு ஒப்புதல் கடிதம் எழுதிக் கொடுத்ததாக எதிரி தரப்பில் வாதிடப்பட்டது. மேற்படி, எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களை புகார்தாரர் தனது முதல் விசாரணை மற்றும் மனதாரர் தரப்பில் மறுவிசாரணை செய்தபோதும், எதிரியின் வாதத்தை மறுதளித்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி, எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் இந்த வழக்கின் தொடர்புடைய பொருண்மை (Relevancy facts) என்றாலும்

அது சட்டத்தால் அனுமதிக்கத்தக்க சாட்சியமா? அதை இந்நீதிமன்றம் அனுமதிக்கத்தக்கதா? என்பதை பின்வரும் இந்திய சாட்சியச் சட்டம் 25, 26, 27, 65, 136 ஆகிய பிரிவுகளின் கீழ் அறியலாம்.

18. பிரிவு 25

காவல் அதிகாரியிடம் கொடுக்கப்படுகின்ற குற்ற ஏற்புரையை மெய்ப்பித்தல் கூடாது.

Confession to police–officer not to be proved.

ஒரு காவல் அதிகாரியிடம் கொடுக்கப்படுகின்ற குற்ற ஏற்புரையை (Confession Made to a Police Officer) குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒரு நபருக்கு எதிராகப் பயன்படுத்தமுடியாது. (Not to be proved against a person accused of any offence) என்பது சட்டவிதியாகும். அதன் அடிப்படையில், இந்த வழக்கின் புகார்தாரர் எ.சா.1 ஆன காவல் துறை அதிகாரிகள் முன்பு கொடுத்த வாக்குமூலத்தை சில, இடங்களில் ஒப்புக் கொண்டும், மறுத்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி, வாக்குமூலமானது குற்ற ஏற்புரை என்ற வரையறைக்குள் வரும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏனெனில், குற்ற ஏற்புரையை (Confessions) என்பதற்கு எந்தச் சட்டமும் எந்த வரையறையும் சொல்லவில்லை. ஆனால் Sahoo /Vs/ State of Uttar Pradesh AIR 1966 SC 40 என்ற வழக்கில் குற்ற ஏற்புரை (Confession) என்பது இப்படிச் சொல்லப்பட்டுள்ளது.

(a) இஃது ஓர் ஏற்புரை

(b) இது வாய் மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, அல்லது மின்னணு வடிவத்திலோ இருக்கலாம்.

(c) இது குற்றம் சாட்டப்பட்டவரால் சொல்லப்பட்டிருக்க வேண்டும்.

(d) இது குற்றத்தை ஒப்புக் கொள்கின்ற விதமாகவோ, அல்லது ஒரு குற்றத்தின் எல்லாக் கூறுகளையும் கணிசமான அளவுக்கு (Substantially) ஒப்புக்கொள்ளுகின்ற விதமாகவோ இருக்கும் என மாண்பமை முன்தீர்ப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், புகார்தாரர் கொடுத்த வாக்குமூலமானது குற்ற ஏற்புரை என்ற வரையறைக்குள் வரும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏனெனில், இந்தச் சட்டப்பிரிவில் வருகிற காவல் அதிகாரி (Police Officer) யார் என்றால், குற்ற விசாரணை முறைச் சட்டம், 1973 – அத்தியாயம் 12–ன் கீழ், புலன் விசாரணை செய்து

குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய அதிகாரம் படைத்த காவல் அதிகாரிகளை மட்டும் தாம் குறிக்கிறது என மேற்படி, சங்கதிகளை பொருந்தும்விதமாக மாண்பமை Rajkumar Karwal / VS/ Union 1990 SCC (Crl) 330 என்ற தீர்ப்பில், பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், இந்த வழக்கின் எ.சா.1 மருதப்பன் என்பவர் காவல் துறை அதிகாரியாக பணி செய்து, இந்த வழக்கின் புலனாய்வு அதிகாரியாக உள்ளார். அதனால், எ.சா.1ன் சாட்சியம் மற்றும் எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் எதிரி கொடுத்த புகாரின் எதிரியான இந்தப் புகார்தாரர் கொடுத்த வாக்குமூலங்கள் இந்திய சாட்சிய சட்டத்தால் தொடர்புடைய பொருண்மை என்றாலும், அது பிரிவு 136 இந்திய சாட்சிய சட்டத்தின்படி அனுமதிக்கத்தக்க சாட்சியம் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. "குற்றம் சாட்டப்பட்டவரால் கொடுக்கப்படும் குற்ற ஏற்புரையைக் (Confession) குற்றம் சாட்டப்பவருக்கு எதிராகப் (against) பயன்படுத்த முடியாது. ஆனால், குற்றம் சாட்டப்பட்டவர், தனது குற்ற ஏற்புரையைத் (Confession) தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஒரு குற்ற ஏற்புரையை இந்தச் சட்டப்பிரிவின் கீழ் கொண்டு வரவேண்டும் என்றால், அந்த நபர் குற்ற ஏற்புரையைக் கொடுக்கும்போது கைது (arrest) செய்யப்பட்டு இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. காவல் அதிகாரியின் காவலில் (custody) இருந்தாலே போதும் என மாண்பமை **In Re Dharam Deo 2014 (2) MLJ (Crl) 435** என்ற தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

19. மேலும், ரன்தீப் சிங் (எ) ராணா மற்றும் ஒருவர் – எதிர் – அரியானா மாநில அரசு மற்றும் பலர் என்ற வழக்கில் கடந்த 22.11.2024 மாண்பமை உச்ச நீதிமன்ற தீர்ப்பில், இந்திய சாட்சியச் சட்டம், 1872, பிரிவுகள் 25, 26 மற்றும் 27 – சாட்சியச் சட்டத்தின் சாட்சிய வலிமைகள் (Evidenciary value) குறித்து " பிரிவு 25.ல் காவல் அலுவலரிடம் கொடுக்கப்பட்ட ஒப்புதலுரை மெய்ப்பிக்கப்படுதல் ஆகாது. பிரிவு 26. காவல்துறையின் காவலில் இருக்கும்போது எதிரியால் கொடுக்கப்படும் ஒப்புதலுரை அவருக்கு விரோமாக மெய்ப்பிக்கப்படுதல் ஆகாது.

20. பிரிவு 27. எதிரியிடமிருந்து பெற்ற தகவலில் எவ்வளவு மெய்ப்பிக்கப்படலாம். – வரம்புரையாக, குற்றம் ஏதேனும் சுமத்தப்பட்டு ஒரு காவல் அலுவலரின் காவலில் உள்ள ஒருவரிடமிருந்து பெற்ற தகவலின் விளைவாகக் கண்டுபிடிக்கப்பட்டதாக சங்கதி எதையும் பற்றி சாட்சியம் கொடுக்கப்படுகிறபோது, அத்தகைய தகவலில் எந்த

அளவு, அத்தகவலின்மூலம் கண்டுபிடிக்கப்பட்ட சங்கதிக்கு ஐயத்திற்கிடமின்றி சம்பந்தமுடையதாயிருக்கிறதோ அந்த அளவு தகவலை, அது ஒப்புதலுரையாக ஆனாலும் சரி இல்லையென்றாலும் சரி, மெய்ப்பிக்கப்படலாம்."

21. ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்திருக்கக்கூடாது என்றும், காவலில் இருக்கும்போது எதிரி காவல்துறை அதிகாரியிடம் அளித்த ஒப்புதல் வாக்குமூலம், பிரிவு 27 பொருந்துகையைத் தவிர, சாட்சியச் சட்டத்தின் கீழ் ஏற்புடையதல்ல என இந்த வழக்கிற்கு எ.சா.1 மற்றும் எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் U.Sree /Vs/ U.Srinivas 2013(2) SCC 114 என்ற வழக்கின் முன்தீர்ப்பின்படி சட்டத்தால் அனுமதிக்கத்தக்க சாட்சியம் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

22. மேலும், இந்த வழக்கில் எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் மனுதாரர் தரப்பு ஆட்சேபனைகளுடன் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஏனெனில், மேற்படி ஆவணங்கள் பிரிவு 65 இந்திய சாட்சிய சட்டத்தின்கீழ் இரண்டாம்நிலை சாட்சியம் என்ற வரையறைக்குள் வருகிறதா என்பதை பார்க்கும்போது, பிரிவு 65–ன்படி எதிரி ம.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையெழுத்து அவருடையதுதான் என்று ஒப்புக்கொள்கிறார். அவ்வாறு கையெழுத்து எதிரியினுடையதுதான் என்று ஒப்புக்கொண்டதால் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139–ன்படி ஒரு கடனை தீர்க்கும் முகமாகத்தான் காசோலை கொடுக்கப்பட்டுள்ளது என்று அனுமானம் எடுக்கவேண்டும் என்றும், எனினும், அந்த அனுமானத்தை இறுதியான அனுமானம் இல்லை என்றும், அதனை முறியடிப்பதற்கு எதிரி தரப்புக்கு சட்டப்படியான உரிமை உள்ளது என்று சட்டப்பிரிவு கூறுகிறது. அதன்படி எதிரி தரப்பில் கொடுக்கப்பட்ட எ.ம.சா.1 மற்றும் எ.ம.சா.ஆ.1, 2, 3 மூலம் முறியடிக்கப்படவில்லை.

23. மேலும், எ.ம.சா.ஆ.1, 2, 3 ஆவணங்களில் ஏற்புடைய ஆவணங்கள் அல்ல. மேற்கண்ட ஆவணங்கள் ஆட்சேபனைக்குட்பட்டதாகும். ஏனெனில், மேற்கண்ட ஆவணங்கள் நீதிமன்றம் மூலம் Send for செய்யப்பட்டு, நீதிமன்றத்திற்கு வரப்பட்டதல்ல. மேற்படி ஆவணங்கள் எ.ம.சா.ஆ 1 ஆல் கொண்டு வரப்பட்டது. மேற்படி ஆவணங்கள் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு வந்திருந்தால் மேற்கண்ட ஆவணங்களில் முத்திரை

பதிக்கப்பட்டிருக்கும். அவ்வாறு எ.ம.சஆ.1, 2, 3 ல் எவ்வித காவல்துறை முத்திரையோ இல்லை. மேலும், எ.ம.சா.1 ன் குறுக்கு விசாரணையில் "ஸ்ரீதர்ராஜா கொடுத்த புகாரைப் பெற்றுக் கொண்டு நான் ரசீது கொடுக்கவில்லை" என்று கூறியுள்ளார். மேலும், புகார்தாரர் மற்றும் எதிரியின் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சி எதுவும் வாங்கவில்லை என்று கூறியுள்ளார். மேலும், எ.ம.ஆ.1, 2, 3 ஒரிஜினலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டாத நிலையில் ஜெராக்ஸ் ஆவணங்கள் ஏற்புடையதல்ல. இந்திய சாட்சிய சட்டம் 65–ன்படி ஒரு ஆவணத்தில் ஜெராக்ஸ் இரண்டாம்நிலை சான்றாவணமாகும். ஒரு இரண்டாம்நிலை ஆவணம்

iv. கீழ்க்கண்ட நிலையிலேயே செல்லத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளது–

a) Original is lost or destroyed.

b) Original is a public document.

c) Original is difficult to move.

d) Original is a document with a certified coopy.

e) Original is a collection of documents

f) Original is in the possession of the opposing party.

g) document is non produce dby alegally bound person.

இவற்றில் எ.ம.ஆ.1, 2, 3 எவ்வகை நிலையிலும் இல்லை என்பதால் மேற்கண்ட ஆவணங்கள் ஏற்புடையதல்ல.

24. மேலும், இவ்வழக்கின் ம.சா.ஆ.1 காசோலையை தேதி பெயர் மற்றும் தொகை நிரப்பப்படாமல் கையொப்பம் மட்டும் செய்து புகார்தாரரிடம் கொடுத்ததாக எதிரி கூறியுள்ளார். மேற்படி காசோலையை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி மேற்படி கூற்றை நிரூபணம் செய்ய எதிரி எவ்வித முயற்சியும் செய்யவில்லை. மேலும், எதிரி அவரது தரப்பினை நிரூபிக்க நீதிமன்றத்தில் சாட்சியம் கூட அளிக்கவில்லை என்பதில் இருந்தே எதிரியின் கூற்று உண்மையற்றது என்பது நன்கு தெரியவரும்.

25. மேலும், ஓர் ஆவணத்தில் கையொப்பத்தை ஒத்துக் கொள்வது அல்லது அந்த ஆவணத்தின் உள்ளடக்கத்தை ஒத்துக்கொள்வது அந்த ஆவணம் சாட்சியமாக அனுமதிக்க வேண்டும் என்பதை நீதிமன்றம்தான் தீர்மானிக்க முடியும் என மாண்பமை **Roshanlal Sharma /Vs/ Waltan Singh Dogra AIR 2017 H.P.6 தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில்,** <u>பிரிவு 136 இந்திய சாட்சியச் சட்டத்தின்படி</u> சாட்சியம்,

தொடர்புடையப் பொருண்மை மீதானதாக (relevant) இருந்தால் மட்டும் போதாது. அஃது, இந்தச் சட்டப்படி அனுமதிக்கத்தக்கதாகவும், (admissible) இருக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், **மேற்படி எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களை புகார்தாரர் மறுத்து சாட்சியம் அளித்துள்ளதால் இந்நீதிமன்றம் எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.3 ஆவணங்களை அனுமதிக்கத்தக்க சாட்சியம் என்ற வரையறைக்குள் வராது என இந்நீதிமன்றம் கருதுகிறது.**

26. மேலும், மேற்படி வழக்கில் ம.சா.ஆ–4 வழக்கறிஞர் சட்ட அறிவிப்பு மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138(பி)ஐ திருப்தி செய்யவில்லை என்று எதிரி தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. ஆனால், மாற்றுமுறை ஆவணச்சட்டத்தில் அறிவிப்பிற்கு குறிப்பிட்ட Format ஏதும் கிடையாது. மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138(பி) யானது அறிவிப்பில், (1) must be given by the payee or the holder in due course; (2) must be in writing ; (3) must be given within thirty days of receipt of information of dishonour and (4) must make a demand for payment of the amount of the cheque dishonoured. இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

27. எதிரி தரப்பில் ம.சா.ஆ.4 அறிவிப்பில் புகார்தாரர் "எம்கட்சிக்கு செலுத்த வேண்டிய தொகையினை எம்கட்சியிடம் செலுத்தி தாங்கள் எம்கட்சிக்கு கொடுத்த காசோலையை எம்கட்சியிடம் திரும்ப பெற்றுக்கொள்ள வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் காசோலை தொகையை கேட்டு அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்று வாதிடப்பட்டது. மேற்கண்ட வாதத்தை ஏற்று சமூகம் மன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து புகார்தாரர் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தாக்கல் செய்த CRIMINAL APPEAL (MD) NO. 328/2005-ல்

> "It is an admitted fact that Ex.P4 is the legal notice given by the complainant to the accused wherein it has been clearly stated that the accused has received a sum of Rs.2,00,000/- from the Complainant by the way of debt in 16.06.2004 and in order to discharge the same, the cheque in question has been given on 23.09.2004 and the same has been in presented in the concerned bank on the same day and the bank has returned the cheque on 28.09.2004 and further it is stated in Ex.P4 to the effect that the accused should repay the debt amount and

get back the cheque which has been issued by him. Even from a cursory look of Ex.P4 it is very clear that in Ex.P4 it has been clearly mentioned to the effect that the accused has reeived a sum of Rs.2,00,000/- on 16.06.2004 and in order to discharge the same cheque has been given on 23.09.2004 and the same has been presented on the concerned bank on the same day and returned on 28.09.2004 and further their the accused has been directed to discharge the debt amount and get back the cheque which has been given to the complaint. The court below without considering the entire contents of Ex.P4, has erroneously come to the conclusion that Ex.P4 has not been given as contemplated in negotiable instruments act, 1881.

It is settled principle of law that no form is prescribed inNegotiabe Instruments Act, 1881. So as to give a legal notice under section 138 of the said act. Therefore viewing from any angle, the conclusion arrived as by the court below for dismissing the complaint is totally erroneous.

என்று கூறி வழக்கை நோட்டீஸ் 139(பி) யை திருப்தி செய்துள்ளது என்று கூறி மீண்டும் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளதைக் கருத்தில் கொண்டும், எதிரி இந்த வழக்கின் பதிலறிவிப்பினை பெற்றுக்கொண்டதாக ஒப்புக் கொண்டதைக் கருத்தில் கொண்டும், வழக்கு காசோலை எதிரி புகார்தாரருக்கு சட்டப்பூர்வ கடனுக்காகத்தான் கொடுத்திருப்பார் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

28. **மேற்படி புகார்தாரர் பிரிவு 138-ன் உட்கூறுகளை இந்நீதிமன்றத்தில் எந்தவித முரண்பாடும் இல்லாமல் தன்னுடைய சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்துள்ளார். அதன் அடிப்படையில், எதிரியின் காசோலை புகார்தாரர் வசம் முறைப்படி வைத்திருந்தார் எனில், மேற்படி காசோலையானது சட்டப்பூர்வ கடனுக்காகத்தான் புகார்தாரர் வைத்திருந்தார் என்பதை பின்வரும் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டப்பிரிவின் வாயிலாக அறியலாம்.**

29. **பிரிவு 9. முறைப்படி வைத்திருப்பவர்:-**

29.1. “முறைப்படி வைத்திருப்பவர்" என்பது, கடனுறுதிச் சீட்டில், மாற்றுச் சீட்டில் அல்லது காசோலையில் சொல்லப்பட்ட தொகை செலுத்தத் தக்கதாவதற்கு முன்பு, எவரிடமிருந் நபர் எவரும் தம்முடைய உரிமை மூலத்தை அடையப் பெற்றாரோ, அந்த

நபரின் உரிமை மூலத்தில் குறைபாடு எதுவும் இருந்தது என்று நம்புவதற்குப் போதுமான காரணம் பெற்றிராமல், கொணர்பவருக்குச் செலுத்தத்தக்கதாயின், எவர் மறுபயனுக்காக அதன் உடைமையாளர் ஆனாரோ அந்த நபர் என்று பொருள்படும். அல்லது, உத்தரவின்படி செலுத்தத்தக்கதாயின் செலுத்தப்படுநர் அல்லது மேற்குறிப்பு எழுதப் பெற்றவர் என்று பொருள்படும்.

29.2. மேற்படி பிரிவு 9–ன்படி எதிரியின் காசோலையை புகார்தாரர் முறைப்படி தனது உடைமையில் கடந்த 23.09.2004 முதல் தனது உடமையில் வைத்திருந்தது அதன் தொடர்ச்சியாக கடந்த 23.09.2004 அன்று வசூலுக்காக தாக்கல் செய்து அதில் போதிய பணம் இல்லை என்ற மெமோரண்டம் கிடைத்து எதிரிக்கு கடந்த 08.10.2004 அன்று புகார்தாரர் அவரது வழக்கறிஞர் மூலம் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பி அந்த வழக்கறிஞர் அறிவிப்பை கடந்த 09.10.2004 அன்று எதிரி பெற்றுக்கொண்டுள்ளார் மேற்படி வழக்கின் காசோலை புகார்தாரர் வசம் உள்ளது குறித்து எதிரி வைக்கும் வாதமானது **வழக்கின் காசோலை எதிரி புகார்தாரரிடம் கடன்பட்ட ரூ.1,50,000/–த்திற்கு ஈடாக தனது சகோதரி லதா என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை கிரையம் செய்து கொடுத்து அதோடு, இந்த வழக்கின் காசோலையை புகார்தாரிடம் கொடுத்திருந்ததாகவும், அதன்பிறகு ரூ.1,50,000/–த்தை பைசல் செய்தபிறகு புகார்தாரர் வாங்கிய கிரயத்தை எதிரி சொன்ன வெளி நபர்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றும், ஆனால், வழக்கின் காசோலையை திருப்பித் தராமல் மோசடித்தனமாக வங்கியில் தாக்கல் செய்து, இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் என்பதே எதிரியின் வாதமாகும்.**

30. **மேற்படி எதிரி தரப்பின் வாதத்தின்படி வழக்கு காசோலையை மோசடி செய்தார் எனில், எதிரி காசோலையை திரும்பப் பெறுவதற்காக, காசோலையை மோசடி செய்துவிட்டார்கள் என்று காவல் நிலையத்தில் புகார் மனுவோ, வழக்கறிஞர் அறிவிப்போ, வங்கியில் Stop payment போன்ற எந்தவிதமான சட்டப்பூர்வ நடவடிக்கையும் எதிரி எடுக்கவில்லை என்பதையும், எதிரி தன்னுடைய எதிர் வாதத்தை தன்னுடய முதல் நிலையிலே அதாவது வழக்கறிஞர் பதில் அறிவிப்பிலோ, நீதிமன்ற முதல் கேள்வியின் போதோ, நீதிமன்றத்தில் புகார்தாரரை குறுக்கு விசாரணை**

செய்தபோதோ, எதிரியை நீதிமன்றத்தில் கு.வி.மு.ச.313(1)(b) ஆகிய நிலைகளில் கூட தன்னுடைய எதிர்வாதத்தை எதிரி மறுதளிக்கும் விதமாக (Irrebutable presumption) புகார்தாரரின் வழக்கை சந்தேகிக்கும் வகையில் எதிரி மற்றும் அவர் தரப்பு சாட்சியம் அமையவில்லை என்பதிலிருந்தே பிரிவு 9–ன் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின்படி எதிரியின் காசோலையை புகார்தாரர் தன் உடமையில் (holder in due course) என்ற அடிப்படையில் புகார்தாரர் சட்டப்பூர்வ கடனுக்காத்தான் (Legally enforceable debt or liability) வைத்திருந்தார் என்பதை அறியலாம். மேற்படி புகார்தாரர் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138 உட்கூறுகளை எவ்வித சந்தேகமுமில்லாமல் தனது வழக்கறிஞர் அறிவிப்பு, புகார்மனு, நீதிமன்ற விசாரணை ஆகியவற்றின் மூலம் நிருபித்துள்ளார்.

31. மேலும், மேற்படி காசோலையானது சட்டப்பூர்வ கடனுக்காகத்தான் புகார்தாரர் வைத்திருந்தார் என்பதற்கான அனுமானம் தொடர்பான பின்வரும் சட்டப்பிரிவின் வாயிலாக அறியலாம்.

32. **118 மாற்றுமுறையாவணங்கள் குறித்த ஊகங்கள்:-** வேறுவகையில் நிருபிக்கப்படும் வரையில், பின்வரும் வகையில் ஊகிக்கப்படும்

(அ) மறுபயன்: மாற்றுமுறையாவணம் ஒவ்வொன்றும் மறுபயனுக்காகவே செய்யப்பட்டதாகும். அல்லது வரையப்பட்டதாகும். அத்தகைய முறையாவணம் ஒவ்வொன்னும், அது ஏற்கப்பட்டிருக்கறபோது, மேற்குறிப்பு எழுதப்பட்டிருக்கிறபோது, ஆவண மாற்றுதல் செய்யப்பட்டிருக்கிற போது அல்லது உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கும்போது அல்லது மறுபயனுக்காகவே ஏற்கப்பட்டதாகும். மேற்குறிப்பு எழுதப்பட்டது, ஆவண மாற்றுதல் செய்யப்பட்டது அல்லது உரிமை மாற்றம் செய்யப்பட்டது என்று ஊகிக்கப்படும்.

(ஆ) தேதி குறித்து: ஒரு தேதியைக் கொண்டுள்ள மாற்று முறையாவணம் ஒவ்வொன்றும் அத்ததைய தேதியில் எழுதப்பட்டது அல்லது வரையப்பட்டது என்றே ஊகிக்கப்படும்.

(இ) ஏற்புக்காலம் குறித்தது: ஏற்கப்பட்ட மாற்றுச்சீட்டு ஒவ்வொன்றும், அதன் தேதிக்குப் பின்பு மற்றும் அதன் முதிர்வுக் காலத்திற்கு முன்பு தகுமான காலத்திற்குள் ஏற்கப்பட்டது என்று ஊகிக்கப்படும்.

(ஈ) உரிமை மாற்றுக்காலம குறித்து: ஒரு மாற்று முறையவணத்தின் உரிமை மாற்றம் ஒவ்வொன்றும், அதன் முதிர்வுக் காலத்திற்கு முன்பு செய்யப்பட்டது என்று ஊகிக்கப்படும்.

(உ) மேற்குறிப்புகளின் வரிசை முறை குறித்து: ஒரு மாற்று முறையாவணத்தின்மேல் காணப்படுகிற மேற்குறிப்புகள், அதன்மேல் எந்த வரிசைமுறையில் காணப்படுகின்றவோ அந்த வரிசைமுறையில் எழுதப்பட்டன என்று ஊகிக்கப்படும்.

(ஊ) முத்திரைவில்லைகள் குறித்து: தொலைந்துவிட்ட கடனுறுதிச் சீட்டு, மாற்றுச்சீட்டு அல்லது காசோலையானது முறையாக முத்திரைவில்லை ஒட்டப்பட்டது என்று ஊகிக்கப்படும்.

(எ) வைத்திருப்பவர் முறைப்படி வைத்திருப்பவராதல்: ஒரு மாற்று முறையாவணத்தை வைத்திருப்பவர் அதை முறைப்படி வைத்திருப்பவர் ஆவார் என்று ஊகிக்கப்படும்.

வரம்புரையாக: ஒரு முறையாவணம் அதன் சட்டப்படியான சொந்தக்காரரிடமிருந்து அல்லது மோசடியின் வாயிலாகப் பெறப்பட்டிருக்கிறபோது அல்லது அதனை வரைந்தவரிடமிருந்து அல்லது ஏற்குநரிடமிருந்து, ஒரு குற்றச்செயல் அல்லது மோசடியின் வாயிலாக அல்லது சட்டமுரணான மறுபயனுக்காகப் பெறப்பட்டிருக்கிறபோது அதை வைத்திருப்பவர் தாம் முறைப்படி வைத்திருப்பவர் என்று மெய்ப்பிக்கும் சுமையானது அவர்மேல் இருக்கிறது என்று கொள்ளப்படுதல் வேண்டும்.

139 உடையவருக்கு உறுதுணையாக அனுமானித்தல் :- முரண்பாடான வகையில் மெய்ப்பிக்கப்பட்டிருந்தாலன்றி, கடன் அல்லது வேறு பொறுப்படைவின், பகுதி அல்லது முழுமையான நிறைவேற்றத்தின் பொருட்டு பிரிவு 138-இல் குறிப்பிட்டுள்ள தன்மையில் காசோலையைக் கொண்டிருக்கின்றவர் காசோலையைப் பெற்றவராக அனுமானக்கப்படுவார்.

33. **மேற்படி மாற்றுமுறை ஆவணச்சட்டம் 118, 139-ன் படி அனுமானம் புகார்தாருக்கு ஆதரவாக உள்ளது. மேற்படி புகார்தாரரின் வழக்கை புகார்தாரர் 138 உட்கூறுகளை இந்திய சாட்சிய சட்டம் 101-ன் படி நிருபணம் செய்துள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது.**

<u>எதிரி தன் வாதத்தை Preponderance of Probability அடிப்படையில் புகார்தாரர் வழக்கை சந்தேகித்தாரா ?</u>

34. மேற்படி எதிரியின் வாதமான வழக்கின் காசோலை எதிரி புகார்தாரரிடம் கடன்பட்ட ரூ.1,50,000/–த்திற்கு ஈடாக தனது சகோதரி லதா என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை கிரையம் செய்து கொடுத்து அதோடு, இந்த வழக்கின் காசோலையை புகார்தாரிடம் கொடுத்திருந்ததாகவும், அதன்பிறகு ரூ.1,50,000/–த்தை பைசல் செய்தபிறகு புகார்தாரர் வாங்கிய கிரயத்தை எதிரி சொன்ன வெளி நபர்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றும், ஆனால், வழக்கின் காசோலையை திருப்பித் தராமல் மோசடித்தனமாக வங்கியில் தாக்கல் செய்து, இந்த வழக்கைத் தாக்கல் செய்து புகார்தாரர் எதிரிக்கு ரூ.2,00,000/– கடன் கொடுத்ததாக சொல்வது சட்டப்பூர்வ கடனாக இல்லை என்பதே எதிரியின் வாதமாகும். மேற்படி, எதிரியின் வாதத்தை எதிரி சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்ய வேண்டிய அவசியமில்லை. ஆனால், preponderance of probability அடிப்படையில் புகார்தாரரின் வழக்கை சந்தேகிக்கும் வகையில் புகார்தாரருக்கு ஆதரவாக அமைந்துள்ள அனுமானத்தை மறுதளிக்கும் விதமாக (irrebutable presumption and probable defence) எதிரி தரப்பல் சாட்சிகளும், சான்றாவணங்களும், எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஆகியவற்றின் மூலம் புகார்தாரரின் வழக்கை சந்தேகித்தால் போதுமானது என்பது சட்டநிலைப்பாடாகும். அந்த வகையில், எதிரி தரப்பில் **<u>எ.சா.1</u>** **<u>மருதப்பன்</u>** என்பவரை எதிரி தரப்பில் நீதிமன்றம் முதல் விசாரணையில் பின்வருமாறு சாட்சியம் அளித்துள்ளார். "வேறு கடன் கொடுத்தாரா என்பது பற்றி எனக்குத் தெரியாது. அந்தப் பிரச்சனை பற்றிப் பேசவில்லை.

35. வேல்ப்பாண்டியனுக்கும், எஸ்.பி. லதாவிற்கும் இடையே இடம் சம்பந்தமாக இந்த புகார்மனு தவிர வேறு எதுவும் கொடுத்து விசாரணை நடந்ததாக என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வேல்ப்பாண்டியனுக்கு எதிரி காசோலை கொடுத்தது சம்பந்தமாக இந்த மனுவில் எதுவும் கூறிக்கொள்ளவில்லை. எ.த.சா.ஆ-2 ல் கனரா வங்கி கிளை, இராஜபாளையம் வரிசை எண். 597961 என்ற காசோலையை வேல்சாமிபாண்டியனிடம் எதிரி ஸ்ரீதர்ராஜா கொடுத்ததாகக் கூறவில்லை. அதுபற்றி நான் விசாரிக்கவில்லை. அது பற்றி எனக்குத் தெரியாது. வேல்ச்சாமி பாண்டியனிடம் ரூ.2,00,000/- கடன் பெற்றதாகவும்,

அதில் 1-1/4 லட்சம் காசோலையாகவும், ரூ.75,000/- ரொக்கமாகவும் ஸ்ரீதர்ராஜா பெற்றதாகச் சொல்லவில்லை. எ.த.சா.ஆ.1ல் நான் அறிவேன் சாட்சியாக யாரிடமும் கையெழுத்துப் பெறவில்லை. மனுவை விசாரித்து பேசி வாக்குமூலம் பெற்றதால் சாட்சி யாரிடமும் கையெழுத்துப் பெறவில்லை. எஸ்.பி. லதாவை நான் விசாரிக்கவில்லை.

36. எ.த.சா.ஆ.2 என்னிடம் காட்டப்பட்ட நகலை என் அலுவலகத்தில் உள்ள அதன் அசலையும் ஒப்பிட்டுப் பார்க்கவில்லை. ஸ்ரீதர்ராஜா, வேல்சாமிபாண்டியனிடம் 1-1/2 லட்சம் கடன் பெற்றதற்காக எழுதாத காசோலை கொடுத்ததாக எனது விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் அது என் விசாரணைக்கு அல்லது என் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை. இந்த எ.த.சா.ஆ.3–ல் தனிநபர் சாட்சியாக யாரையும் சேர்த்துக்கொள்ளவில்லை. எத.சா.ஆ.2 மனுவில் ஸ்ரீதர்ராஜா எங்கள் குடும்பச் சொத்து எங்களுக்கு திரும்பக் கிடைக்க எதிரியிடமிருந்து மேற்படி சொத்தை மீட்டுத்தரும்படி கேட்டுக்கொள்கிறேன் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான்." என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி **எ.சா.1ன் சாட்சியத்திலிருந்து எதிரி கூறும் வாதத்தை ஒத்துரைக்கும் விதமாக எ.சா.1 சாட்சிம் அளிக்கவில்லை. அதாவது, எதிரியின் காசோலையை புகார்தாரருக்கு கொடுத்து அந்தக் காசோலையை புகார்தாரர், மோசடியாக பயன்படுத்தினார் என்பதை எ.சா.1 நீதிமன்ற முதல் விசாரணை, குறுக்கு விசாரணை சாட்சியத்திலிருந்து குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்பதை அறியலாம். மேற்படி, எ.சா.1ன் சாட்சியம் எதிரியின் வாதத்தை வலுசேர்க்கும் விதமாக அமையவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.**

37. மேலும், ம.சா. 1 குறுக்கு விசாரணையில், எதிரி தரப்பில், எதிரி கு.வி.மு.ச. பிரிவு 314–ன் எதிரி தரப்பில் " **இவ்வாறு எதிரியிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் எதிரி கையொப்பம் மட்டும் செய்து கொடுத்த காசோலையை வைத்து பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல." என எதிரியால் வழக்கின் காசோலை புகார்தாரர்வசம் உள்ளது ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும்.**

38. மேற்படி எதிரியானவர் வெளி உலகம் நன்கு அறிந்தவர் ஆவார். வழக்கு காசோலை ஏற்கனவே பெற்ற ரூ.1,50,000/– பணத்திற்காக தனது சகோதரி லதா

என்பவரின் சொத்து கிரையம் செய்து கொடுத்தும், வழக்கு காசோலை பொறுப்புக்காக புகார்தாரரிடம் கொடுத்திருந்தார் எனில், ஏன் எ.சா.ஆ.1, எ.சா.ஆ.2, எ.சா.ஆ.3 ஆகிய ஆவணங்களில் வழக்கு காசோலை புகார்தாரர் மோசடி செய்துவிட்டார் என்றோ, காசோலை திரும்ப வேண்டுமென்றோ குறிப்பிடவில்லை என்பதிலிருந்தும் வழக்கு காசோலை புகார்தாரர் கடந்த 23.09.2004 முதல் தன் உடமையில் வைத்தபிறகு அதன் அடிப்படையில், வழக்கு காசோலையை வங்கியில் செலுத்தி அதனைத் தொடர்ந்து 08.10.2004–ல் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி அதை எதிரி 09.10.2004–ல பெற்றுக் கொண்டபிறகு இந்த வழக்கின் எதிரியானவர் பதில் அறிவிப்போ, அல்லது புகார்தாரர் மீது காவல் நிலையத்திலோ அல்லது தனக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு எதிராக எந்தவிதமான சட்ட நடவடிக்கையும் எதிரியால் மேற்கொள்ளப்படவில்லை என்பதை அறிய முடிகிறது.

39. மேலும், **எதிரி புகார்தாரரிடம் கடன்பட்ட ரூ.1,50,000/–த்திற்கு ஈடாக தனது சகோதரி லதா என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை கிரையம் செய்து கொடுத்து அதோடு, இந்த வழக்கின் காசோலையை புகார்தாரிடம் கொடுத்திருந்ததாகவும், அதன்பிறகு ரூ.1,50,000/–த்தை பைசல் செய்தபிறகு புகார்தாரர் வாங்கிய கிரயத்தை எதிரி சொன்ன வெளி நபர்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றும், ஆனால், வழக்கின் காசோலையை திருப்பித் தராமல் மோசடித்தனமாக வங்கியில் தாக்கல் செய்து, இந்த வழக்கைத் தாக்கல் செய்து புகார்தாரர் எதிரிக்கு ரூ.2,00,000/– கடன் கொடுத்ததாக சொல்வது சட்டப்பூர்வ கடனாக இல்லை என்பதே எதிரியின் வாதமாகும்.** மேற்படி, புகார்தாரர் காசோலையை மோசடி செய்தார் எனில், எதிரி காசோலையை திரும்பப் பெறுவதற்காக, காசோலையை மோசடி செய்துவிட்டார்கள் என்று காவல் நிலையத்தில் புகார் மனுவோ, வழக்கறிஞர் அறிவிப்போ, வங்கியில் Stop payment போன்ற எந்தவிதமான சட்டப்பூர்வ நடவடிக்கையும் எதிரி எடுக்கவில்லை என்பதையும், எதிரி தன்னுடைய எதிர் வாதத்தை தன்னுடய முதல் நிலையிலே அதாவது வழக்கறிஞர் பதில் அறிவிப்பிலோ, நீதிமன்ற முதல் கேள்வியின் போதோ, நீதிமன்றத்தில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்தபோதோ, எதிரியை நீதிமன்றத்தில் கு.வி.மு.ச.313(1)(b) ஆகிய நிலைகளில் கூட தன்னுடைய எதிர் வாதத்தை எதிரி மறுதளிக்கும் விதமாக (Irrebutable presumption and probable defence) புகார்தாரரின் வழக்கை சந்தேகிக்கும்

வகையில் எதிரியால் தன் வாதத்தை மெய்ப்பிக்கவில்லை. மாறாக, குறுக்கு விசாரணை சாட்சியத்தில் புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் எதிரியிடம் "**இவ்வாறு எதிரியிடம் இருந்து பணத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் எதிரி கையொப்பம் மட்டும் செய்து கொடுத்த காசோலையை வைத்து பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.**" என்றும், புகார்தாரர் வழக்கறிஞர் பதில் அறிவிப்பு அனுப்பியும் எதிரி தனது வாதத்தை வழக்கறிஞர் பதிலறிவிப்பில் தெரிவிக்காததைக் கருத்தில் கொண்டும், காசோலையை எதிரி ஒப்புக் கொண்டதையும், காசோலை Signature Differ என்ற காரணத்தால் திருப்பி அனுப்பப்படவில்லை, தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியுடையதுதான். ம.சா.ஆ.1 காசோலையானது பணம் இல்லை என்ற காரணத்தால் வங்கியால் திருப்பப்பட்டது என்பதைக் கருத்தில் கொண்டும், எதிரி புகார்தாரருக்கு சட்டப்பூர்வ கடனுக்காத்தான் (Legally enforceable debt or liability) வழக்கு காசோலையை கொடுத்திருப்பார் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

40. மேலும், புகார்தாரரின் வழக்கின் பொருண்மைகளோடு, தொடர்புடைய மாண்பமை உச்சநீதிமன்ற, மாண்பமை உயர்நீதிமன்ற முன்தீர்ப்புகளை பின்வருமாறு அறியலாம்

1. Bir Singh vs Mukesh Kumar (2019) 4 SCC 197

என்ற வழக்கில் மாண்பமை நீதிமன்றம் முறையீட்டாளருக்கு சாதகமாக பத்தி 37-ல்

" A meaningful reading o fhte provision of the Negotiable Instruments act including, in particular, section 20,87 and 139 makes it amply clear that a person who signs a Cheque and makes it over to the payee remains ilable unless he adduces evidence to rebut the presumption that the cheque had been issued for payment of a debt or in discharge of ilability. It is immaterial that the cheque may have been filled in by any person other then the drawer, if the cheque is duly signed by the drawer. If he cheque is otherwise valid, the penal provisions of section 138 would be attracted.

மேலும் 42-வது பத்தியில்

"In the absence o fay finding that the cheque in question was not signed by the respondent accused or not voluntarily made over to the payee and in the absence of any evidence with regard to the circumstances in which a blank signed cheque had been given

to the appellant – comlainant, It may reasonably be presumed that the cheque was filled in by the appellant complainant being the payee in the presence of the respondent accused being the drawer, at his requst and/or with his acqulescence. The subsequent filling in of an unfilled signed chque is not an aitheration There was no change in the amount of the cheque, its date or the name of th payee.

மேற்படி மாண்பமை உச்சநீதிமன்ற முன் தீர்ப்பு இந்த வழக்கின் பொருண்மைகளோடு ஒத்துப்போகும் வகையில் உள்ளது. அதாவது காசோலையின் உள்ள கையொப்பத்தை எதிரி மறுக்கவில்லை. இதிலிருந்தே வழக்கின் காசோலை சட்டப்பூர்வ கடனுக்காகத்தான் எதிரி கொடுத்துள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

2. ASHOK SINGH Vs State of U. P and anothers 2025 INSC 427 SC. Live law

என்ற வழக்கில் மாண்பமை உச்ச நீதிமன்றம் முறையீட்டாளரின் வழக்கிற்கு பொருந்தும் விதமாக பத்தி 15, 16, 17-ல்

15. There can be no dispute that in matters relating to alleged offences under Section 138 of the Act, the complainant has only to establish that the cheque was genuine, presented within time and upon it being dishonoured, due notice was sent within 30 days of such dishonour, to which re-payment must be received within 15 days, failing which a complaint can be preferred by the complainant with in one month as contemplated under section 142(1)(b) of the Act.

16. On the other hand, the foremost defence available to the accused is to deny the very liablility to pay the amount for which the cheque was issued on the ground that it was not a 'legally enforceable debt' under the Act.

17. In the present case, there is no denial apropos the signature on the cheque by the respondent no.2 and, as noted hereinbefore, the stand taken is that the said cheque was lost. This is the reason given by the respondnet no.2 to have advised the bank to stop payment due to which the cheque in question was not honoured/encashed. However, the relevant dates beg to tell a different tale. The cheue in question dated 17.03.2010 was presented within time but returned un-encashed on 07.05.2010 with the endoresement 'paymet stopped by drawer'. A legal notice was also sent by the appellant on 18.05.2010 through Registered Post, i.e, within the stipulated thirty days period, intimating about the dishonour of the cheque. As no reply was proffered by respondent no.2, thus, an inference, albeit rebuttable, could arise that he had no sustainable/valid defence to justify why the cheque in question was dishonoured. Be that as it may, the respondent no.2 avers that no reply was sent as he had not received any Legal Notice.

மேற்படி மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பில் எதிரி மற்றும் எ.சா.2 காசோலையில் உள்ள கையொப்பத்தை ஒப்புக்கொண்டும், தன்னுடைய எதிர் வாதத்தை முதல் எடுப்பிலே அதாவது, வழக்கறிஞர் பதில் அறிவிப்பிலே எடுக்க வேண்டும் என கூறியுள்ளது. இந்த வழக்கிற்கு பொருந்துவதாக உள்ளது.

3. SANJABIJ TARI Vs Kishore S. Borcar and anothers 2025 INSC 1158 Live law SC **என்ற வழக்கில் மாண்பமை உச்ச நீதிமன்றம் முறையீட்டாளரின் வழக்கிற்கு பொருந்தும் விதமாக, பத்தி 15, 16, 17. 29, 30, 31–ல்**

15. In the present case, the cheque in question has admittedly been signed by the Respondent No.1-Accused. This Court is of the view that once the execution of the cheque is admitted, the presumption under Section 118 of the NI Act that the cheque in question was drawn for consideration and the presumption under Section 139 of the NI Act that the holder of the cheque receved the said cheque in dischare of a legally enforceable debt or liability arises against the accused. It is pertinent to mention that observations to the contrary by a two Judges Bench in **Krishna Janardhan Bhat vs. Dattatraya G. Hedge, (2008) 4 SCC 54** have been set aside by a three Jduges Bench in **Rangappa** (supra).

16. This court is further of the view that by creating this presumtion, the law reinforces the reliability of cheques as mode of payment in commercial transactions.

17. Needless to mention that the presumption contemplated under Section 139 of the NI Act, is a rebuttable presumption. However, the initial onus of proving that the cheque is not in discharge of any debt or other liability is on the accused/drawer of the cheque [See: **Bir singh vs Mukesh Kumar, (2019) 4 SCC 197] .**

29. Furthermore, the fact that the accused has filed to reply to the statutory notice under section 138 of the NI Act leads to an inference that there is merit in the Appellant – complainant's version. This court in Tedhi Singh vs narayan Dass Mahant, (2022)6 SCC 735 has held that the accused has the initial burden to set up the defence in his reply to the demand notice that the complainant did not have the financial capacity to advance the loan. The relevant portion of the said judgment is reproduced hereinbelow:-

" 10...The proceedings under Section 138 of the NI Act is not a civil suit. At the time, when the complainant gives his evidence, unless a case is set up in the reply notice to the statutory notice sent, that the comlainant did not have the wherewithal, it cannot be expected of the complainant to initially lead evidence to show that he had the financial capacity. To that extent, the courts in our view were right in holding on those lines. However, the accused has the right to demonstrate that

the complainant in a particular case did not have the capacity and therefore, the case of the accused is acceptable which he can do by producing independent materials, namely, by examining his witnesses and producing documents. It is also open to him to establish the very same aspect by pointing to the materials produced by the complainant himself. He can further, more importantly, achieve this result through the cross-examintion of the witnesses of the complainant. Ultimately, it becomes the duty of the courts to consider carefully and appreciate the totality of the evidence and then come to a conclusion whether in the given case, the accused has shown that the case of the of complainant is in peril for the reason that the accused has estblished a probable defence."

30. This court in **MMTC Ltd. And Another vs. Medchl Chemicals and Pharama (P)Ltd. And Another, (2002) 1 SCC 234** has specifically held that when a statutory notice is not replied, it has to be presumed that the cheque was issued towards the discharge of liability.

31. Also, after receipt of the legal notice, wherein the Appellant-complainant alleged that the Respondent No.1-Accused's cheque had bounced, no complainant or legal proceeding was initiated by the Respondent No.1-Accused alleging that the cheque was not to be encashed.

மேற்படி மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பில் எதிரி மற்றும் எ.சா.2 காசோலையில் உள்ள கையொப்பத்தை ஒப்புக்கொண்டும், எதிரியின் காசோலை முறையீட்டாளர் வசம் உள்ளது குறித்து எந்தவிதமான சட்ட நடவடிக்கை எடுக்காதது குறித்தும், தன்னுடைய எதிர் வாதத்தை முதல் எடுப்பிலே, அதாவது, வழக்கறிஞர் பதில் அறிவிப்பிலே எடுக்க வேண்டும் ஆகிய சங்கதிகள் மேற்படி முன்தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி முன் தீர்ப்பு இந்த வழக்கிற்கு பொருந்துவதாக உள்ளது.

4. டி.விஸ்வநாதன் எதிர் சுமதி MHC 20.06.2024

என்ற வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் முறையீட்டாளரின் வழக்கிற்கு பொருந்தும் வகையில்

"மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் 1881, பிரிவுகள் 118 மற்றும் 139– குற்றஞ்சாட்டப்பட்டவர் காசோலையில் உள்ள அவரது கையெழுத்தை ஒப்புக்கொண்டுள்ளது கவனிக்கத்தக்கது கையெழுத்து ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதாலேயே, எதிர்வாதம் நிரூபிக்கப்பட்டாலன்றி, அது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் 1881, பிரிவுகள் 118 மற்றும் 139 இன் கீழான அனுமானத்திற்கு வந்துவிடும் அதன்படி, சட்டப்படி வசூலிக்கத்தக்க கடனுக்காகத்தான் வழக்கின் காசோலை கொடுக்கப்பட்டுள்ளது என அனுமானிக்கலாம்.

41. **மேற்படி முன்தீர்ப்புகளின் அடிப்படையில், புகார்தாரர் தனது வழக்கறிஞர் அறிவிப்பு, நீதிமன்ற முதல் விசாரணை, குறுக்கு விசாரணை, ம.சா.ஆ.1 முதல் ம.த.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களின் மூலம் புகார்தாரர் மாற்றுமுறை ஆவணச்சட்டம் 138–ன் உட்கூறுகளை இந்நீதிமன்றத்தில் எந்தவித முரண்பாடும் இல்லாமல் வழக்கு காசோலை எண். 597961–ஐ எதிரி புகார்தாரரிடமிருந்து பெற்ற ரூ.2,00,000/– சட்டப்பூர்வ கடனுக்காகத்தான் எதிரியின் காசோலை புகார்தாருக்கு வழங்கினார் என்பதை புகார்தாரர் தனது வழக்கை நிரூபணம் செய்துள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது.**

2. <u>பிரிவு 138– மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் படி எதிரி தண்டிக்கத்தக்கவரா?</u>

புகார்தாரர் இந்த வழக்கின் பிரிவு 138 உட்கூறுகளை சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்துள்ளார். ஆனால் எதிரி தனது எதிர்வாதத்தை (Probable defence), (irrebutable presumption) பிரிவு 118 மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தை அனுமானத்தை மறுதளிக்கும் விதமாக புகார்தாரரின் வழக்கை சந்தேகிக்கும் வகையில் பதில் அறிவிப்போ, நீதிமன்ற முதல் விசாரணை, புகார்தாரர் குறுக்கு விசாரணை, 313(1)(b) ஆகியவற்றை தனது எதிர்வாதத்தை மறுதளிக்கவில்லை. மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் பிரிவு 139 புகார்தாருக்கு ஆதரவாக உள்ளது. மேற்படி புகார்தாரரின் வழக்கை புகார்தாரர் 138 உட்கூறுகளை இந்திய சாட்சிய சட்டம் 101–ன் படி நிரூபணம் செய்துள்ளார் என இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிரி குற்றவாளி என்று முடிவு செய்து இவ்வழக்கில் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

இறுதியாக, எதிரி பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் படி குற்றவாளி என இந்நீதிமன்றம் தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 255(2) ன்படி எதிரிக்கு 6 மாதம் சாதாரண சிறைத்தண்டனையும் மற்றும் கு.வி.மு.ச. பிரிவு 357(3)–ன்படி புகார்தாருக்கு இழப்பீடாக ரூ.2,00,000/–த்தை நேரடியாக வழங்க வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் எதிரிக்கு 2 மாதம் சாதாரண சிறைத்தண்டனை தனித்து அனுபவிக்க வேண்டும் என்றும், இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 02.06.2026- என்னால் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–எம்.மாரி)
நீதித்துறை நடுவர்,
சங்கரன்கோவில்.

மனுதாரர் தரப்பு சாட்சி

ம.சா.1 வேலுப்பாண்டியன் (எ) வேலுச்சாமி

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்

ம.சா.ஆ.1	23.09.2004	எதிரியால் புகார்தாரருக்கு வழங்கப்பட்ட கனரா வங்கி, இராஜபாளையம் காசோலை. காசோலை எண். 597961– அசல்
ம.சா.ஆ.2	24.09.2004	கனரா வங்கி, இராஜபாளையம் கிளையால் காசோலை திருப்பப்பட்டதற்கான மேலெழுத்துக் குறிப்பு
ம.சா.ஆ.3	28.09.2004	புகார்தாரர் வங்கி காசோலை திருப்பப்பட்டதை புகார்தாரருக்கு தெரிவித்த மேலெழுத்துக் குறிப்பு
ம.சா.ஆ.4	08.10.2004	எதிரிக்கு புகார்தாரர் அவரது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் (அஞ்சலக ரசீதுடன்)
ம.சா.ஆ.5	09.10.2004	புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் :–

எ.சா.1 மருதப்பன்

எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்

எ.சா.ஆ.1	23.07.2004	மனுதாரர் கொடுக்க வாக்கமூலம் –நகல்
எ.சா.ஆ.2	08.07.2004	புகார் மனு
எ.சா.ஆ.3	23.07.2004	எதிரி கொடுத்த வாக்குமூலம் – நகல்

(ஒம்/–எம்.மாரி)
நீதித்துறை நடுவர்,
சங்கரன்கோவில்.